பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 16 (29—5—68) புதன் ★ வெளியூர்: வைகாசி 17 (30—5—68) வியாழன் [இதழ்: 289

## திருச்சி குருடர் பள்ளி

### அரசுப் பொறுப்பில் வந்தது

திருச்சி, மே 29—

திருச்சி—புத்தூரில் கண் இழந்தவர்களுக்காகத் தனிப்பட்ட நிறுவனத்தினுல் நடத்தப்பட்டு வந்த பள்ளியை இத்திங்கள் 25-ம் நாள் முதல் தமிழக அரசு தனது நேரடிப் பொறுப்பில் ஏற்றுக்கொண்டுவிட்டது,

1956-ம் ஆண்டு இப்பள்ளி துவக்கப்பட்ட நாளிலிருந்து திருச்சி மாவட்ட சுகாதாரச் சங்கத்தினுல் நிர்வகிக்கப்பட்டு வந்திருக்கிறது.

தற்போது இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 48 ஆகும்.

# மனித உயிர்களுக்கு மத்திய அரசு தரும் மதிப்பு!

## நிர்வாகத் திறமையின்மையால் தொடர்கதையாகிறது இரயில் விபத்து!

### அலட்சியப் போக்கினுல் ஏற்படும் அவல நிலைமைகளுக்கு யார் பொறுப்பு?

ரேணிகுண்டா, மே 28

இந்திய இரயில்வேயின் திறமையற்ற நிர்வாகத்தின் விளைவாக இரயில் விபத்து அன்று நிகழ்ச்சியாகிவிட்டது.

நாள் தவருமல் எங்காவது ஓர் இடத்தில் ஏற்பட்டுவரும் விபத்துக்களைத் தவிர்க்க இந்திய அரசு எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

விபத்திலே சிக்கி உயிரிழந்தவர்கள் குடும்பங்கட்கு 'உடனடியாக நிவாரணம்' என்ற பெயரால் நூறே—இருநூறே பணம் கொடுத்துவிடுவதோடு தங்கள் பொறுப்பு முடிந்துவிட்டதாக ஆட்சியாளர்கள் கருதிக்கொண்டிருக்கின்றனர்.

இரயில்வே நிர்வாகத்தில் உள்ளோரின் திறமையின்மையும், ஆட்சியில் உள்ளோரின் அலட்சியப் போக்குமே இன்று இரயில் விபத்து, சோகத் தொடர் கதையாகிவிட்டிருக்கிறது.

மனித உயிர்கட்கு மத்திய அரசு தரும் மதிப்பு, சில நூறு ரூபாய்கள்தான் என்பது தெளிவாகிறது.

நேற்று விடியற்காலை ரேணிகுண்டா இரயில் நிலையத்தில் நடந்த இரயில் விபத்தில் 13 பேர் கொல்லப்பட்டும் 52 பேர் படுகாயமடைந்ததும் இருக்கின்றனர்.

இந்த ஆண்டிலேயே தென் பகுதி இரயில்வேயில் நடந்துள்ள பெரிய விபத்துக்களில் இது இரண்டாவதாகும். அதுவும் இந்த மாதத்திலேயே ஆந்திர மாநிலத்தில் நடந்த இரண்டாவதாகும்.

கடந்த மார்ச் 21-ஆம் நாள் யால்விசியில் நடந்த இரயில் விபத்தில் 57 பேர் கொல்லப்பட்டனர். மே 8-ஆம் நாள் அனப்பார்தி என்ற இரயில் நிலையத்தில் நடந்த விபத்தில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

### சோகக் கதை

ரேணிகுண்டாவில் ஏற்பட்ட இரயில் விபத்தில் சிக்கியவர்களில் கணவனை இழந்த பெண்மணிகளும், மனைவியை இழந்த கணவன்மார்களும், பெற்றேரை இழந்த பிள்ளைகளுமாகப் பலர் தத்தளித்துக்கொண்டிருக்கின்றனர்.

இரண்டு குழந்தைகள் (முறையே 5 வயது, 3 வயது பையன்) விபத்தின்போது, தூக்கி எறியப்பட்டு சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். ஆனுல், 'அக்குழந்தைகளின் பெற்றேர்கள் யார் என்று தெரியவில்லை; அந்தப் பிள்ளைகளை யாரும் தேடவும் இல்லை.

மாவட்டக் கலெக்டர், அந்தப் பிள்ளைகளை திருப்பதி மருத்துவ[illegible] அனுப்பிவைத்தார்; [illegible]மனையிலும் அக்[illegible] தீவிர கவனிக்கப்[illegible]னர் கலெக்டர் [illegible] உத்தரவிட்டதன் [illegible]தக் குழந்தைகளை ம[illegible]துவர்கள் கவனித்தனர்.

சிகிச்சைக்குப் பிறகு அந்தக் குழந்தைகளை கலெக்டர் யாரிடம் ஒப்படைக்கப் போகிருர் என்பது புரியவில்லை!

### இளம் டாக்டரின் பொறுப்பற்ற போக்கு

இரயில் விபத்தில் காயமடைந்தவர்கட்குச் செலுத்துவதற்குத் திருப்பதி மருத்துவமனையில், போதிய இரத்தம் இருப்பில் இல்லை. உடனே இரயில்வே நிர்வாகம் தனது இருப்பிலிருந்து இரத்தம் அனுப்ப ஏற்பாடு செய்தது.

ஒரு தாசில்தார் இரத்தத்தை எடுத்துக்கொண்டு மருத்துவமனைக்கு வந்தார்; அப்போது மருத்துவமனையில் சிகிச்சையளிக்கும் பொறுப்பிலிருந்த டாக்டர் அந்தத் தாசில்தாரைப் பார்த்து, 'நீங்களே வார்டுக்குச் சென்று தேவையானவர்கட்கு இந்த இரத்தத்தைச் செலுத்துங்கள்' என்று கூறினுராம்.

அதைக் கேட்ட தாசில்தார், வியப்பும் அதிர்ச்சியும் அடைந்து, 'அது என்னுடைய வேலையல்ல' என்று பதிலளித்தார்.

மேலும் அவர், 'நீங்கள், இரத்தம் இல்லையே என்று தவித்தீர்கள்; அதைக்கண்டு நான் இரயில்வேயிடமிருந்து இரத்தம் பெற்றுவந்தேன்; இதைப் பயன்படுத்தி இந்த உயிர்[illegible]க் காப்பாற்றவேண்டியது [illegible]ங்கள் கடமை' என்று கூறினுர்.

அதைக் கேட்டு அந்த இளம் டாக்டர், 'என்ன பதிலளிப்பது' என்று புரியாமல் விழித்து நின்ருராம்!

### கவலைப்படக்கூடிய விபத்துத்தானும்!

"நாடு முழுவதிலும் பல்லாயிரக் கணக்கான மைல்கள் ஓடும் இந்திய இரயில்வேக்களில், இங்குமங்கும் சிறிய விபத்துக்கள் நேரிடக்கூடும்; ஆனுல், இதுபோன்ற விபத்துக்கள் பெரிதும் கவலையுற வேண்டிய ஒன்ருகும். இதுபற்றி இரயில்வேத் துறை, ஆவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்"

என்று இரயில்வே துணையமைச்சர் சதுர்வேதி, இந்த இரயில் விபத்துப்பற்றிக் கருத்தெரிவிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்.

### நகராட்சியின் கோரிக்கை — அரசு ஏற்கவில்லை

திருச்சி, மே 28—

காஞ்சிபுரம் நகருக்குள்ளும், அங்கிருந்து வெளியூர்களுக்கும் பேருந்துப் போக்குவரத்தை ஏற்று நடத்த அனுமதிக்குமாறு காஞ்சிபுரம் நகராட்சி, அரசினரைக் கேட்டுக்கொண்டிருந்தது; இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

## எவர் ஆதரவுடன் சிவசேனை இயங்குகிறது?

புதுடில்லி, மே 29—

"'சிவசேனை'க்குப் பம்பாய் மாநில அரசின் உதவியோ, அல்லது அங்குள்ள சில பெரிய அதிகாரிகளின் உதவியோ இல்லாவிட்டால், அது ஒரு நாள்கூட இயங்க இயலாது!

"சிவசேனைக்குப் பல பெரிய இந்திய முதலாளிகளும், வெளி நாட்டினரும் பண உதவி செய்து வருகின்றனர் என்றே கருதுகிறேன்.

"மத்திய அரசின் உள்துறை அமைச்சர் சவான், சிவசேனையைச் சேர்ந்தவர்களைப் பிற்போக்கு வாதிகள்' என்று கூறிவிட்டு, அதே நேரத்தில், தேசப் பற்று மிக்கவர்கள்' என்றும் பாராட்டுகிருர்!

"சிவசேனை, பொருளாதார ஏமாற்றத்தின் காரணமாக ஏற்பட்டது எனக் கருதுவது தவறு; அவர்களின் கோபம், பணக்காரர்களுக்கு எதிரானதன்று; குறிப்பிட்ட சில பிரிவினரைத் தாக்குவதையே அவர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர்; இதை மேலும் வளரவிடக் கூடாது!"

- வி. கே. கிருஷ்ணமேனன்

## 36 கோடி முட்டை இந்தியாவுக்கு அன்பளிப்பு

சிட்னி, மே 29—

ஆஸ்திரேலியா முட்டை உற்பத்தியாளர்கள் 36 கோடி முட்டைகளை இந்தியாவுக்கு அன்பளிப்பாக அளிக்க முன் வந்துள்ளனர்.

"முட்டை, சத்துள்ள உணவு; எனவே, இந்திய உணவின் சத்தை சமப்படுத்துவதற்கு இந்த அன்பளிப்பு ஒரு வகையில் உதவக்கூடும்"

என்று ஆஸ்திரேலிய முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்திருக்கிருர்.

# பழுதுற்ற காங்கிரசுக் கோட்டையிலிருந்து விழும் கல்

## கழகத் தேர்தல் நிதிக்குக் காணிக்கையாகிறது

### மயிலைக் கூட்டத்தில் அமைச்சர் மு. கருணுநிதி இடித்துரை

சென்னை, மே 29—

நேற்று மயிலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணுநிதி அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது காங்கிரசுக்காரார்கள் கூட்டத்தை நோக்கிக் கல் வீசுவதில் ஈடுபட்டனர்.

முதலில் கற்கள் வந்து வீழ்நதபோது அது பற்றி அமைச்சர் கருணுநிதி குறிப்பிட்டுப் பேசுகையில்,

"'கற்களைக் காங்கிரசுக் கட்சியினர் வீசுகிருர்கள்; 'கல் விழுகிறது' என்று கழகத் தோழர்கள் கோபப்படத் தேவையில்லை; அந்தக் கல், பழுதடைந்துபோன காங்கிரசு மாளிகையிலிருந்து இடிந்து விழும் கல்"

என்ருர்; மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"முன்பு, சொல் எறிந்து பார்த்தார்கள்; இப்போது கல் எறிந்து பார்க்கிருர்கள்; இதிலும் தோல்வியைத்தான் அடைவா[illegible].

[illegible]ர்ந்து அமைச்சர் கருணுநிதி அவர்கள் பேசுகையில், காங்கிரசாரின் போக்கைக் குறித்துக் குறிப்பிட்டதாவது:—

"'கல் விழுகிறது' என்பதற்காக யாரும் எழுந்துவிட வேண்டாம்; உங்கள்மீது கல்பட்டுக் காயமுறுவீர்கள் என்ருல், இதோ மேடைக்கு மேலே கூரையாகக் கட்டப்பட்டுள்ள துணியை அவிழ்க்கச் சொல்லிவிட்டு மீண்டும் பேசுவேன்; காங்கிரசின் கல்லடிபட்டு என் உயிர் போகிறவரையில் பேசிக் கொண்டிருப்பேன்; யாரும் என்னைத் தடுத்துவிட முடியாது. அவர்களைப்போல் கோழைகளல்லர் நாம்—பனங்காட்டு நரிகள்! காங்கிரசாரே! உங்கள் சலசலப்புக்கு அஞ்சமாட்டோம்!

"நாங்கள் பதவியில் இல்லாதபோது—போலீசுப் பாதுகாப்பு இல்லாதபோது—நிராதரவாக நாங்கள் இருந்தபோது—இதுபோன்ற கல்லடிக்கும், சொல்லடிக்கும் பயப்படாமல் கட்சி நடத்தியவர்கள்!"

### மீண்டும் ஒரு கல்!

அமைச்சர் இவ்வாறு பேசிக் கொண்டிருந்தபோது, மீண்டும் ஒரு கல் மேடையின் கூரையாக இருந்த துணிமீது விழுந்து—துணியைக் கிழித்துக்கொண்டு கீழே வீழ்ந்தது; உடனே மேடைக்குக் கூரையாக இருந்த துணியை அவிழ்க்குமாறு கட்டளையிட்டார் அமைச்சர்; உடனே தோழர்கள் அந்தக் கூரைத் துணியை அவிழ்த்தார்கள்; மேடைமீதும், மேடைக்குப் பக்கத்திலும் விழுந்த இரண்டு கற்களை அமைச்சரிடம் தோழர்கள் தந்தார்கள்.

கூட்டத்திலிருந்த ஒருவர், 'தென்காசித் தேர்தலுக்குக் காங்கிரசு தரும் நிதி இது' என்ருர்.

அமைச்சர்:—"ஆம்; இந்தத் தோழர் சொல்லுவதுபோல், அவர்கள் தந்த நிதி இது; இதற்காகக் காங்கிரசுக்காரர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்."

[பின்னர் அமைச்சர் அவர்கள், அந்த இரண்டு கற்களையும் ஏலம் விட்டார்; பாலவாக்கம் தோழர் ஏ. எம். அலி, அந்தக் கற்களை, ரூ. 100-க்கு ஏலம் எடுத்தார்; அப்போது அவரிடம் பணம் இல்லாததால், தமது கையில் கட்டியிருந்த ரூ 200 பெறுமானமுள்ள கடிகாரத்தையும், 2 பவுன் மதிப்புள்ள 2 மோதிரங்களையும் அமைச்சரிடம் அவர் தந்தார்.

"நாளையத்தினம் பணத்தைத் தந்து பொருளைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று தோழர் அலியிடம், அமைச்சர் கருணுநிதி கூறினுர்.]

பின்னர் அவர் பேசியதாவது:—

"இந்தப் பணம், தென்காசித் தேர்தல் நிதியில் சேர்க்கப்படும்; கழக நிதிக்குத் தோழர் அலி தந்த நன்கொடையல்ல இந்தப் பணம்; காங்கிரசு நண்பர்கள்தான் மறைமுகமாகத் தென்காசித் தேர்தல் நிதிக்குக் கழகத்திடம் நிதி தந்திருக்கிருர்கள்; அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக!"

### இருவர் கைது

இந்தக் கூட்டத்தில் கல்லெறிந்து கலகம் விளைவிக்க முனைந்த சம்பவத்தையொட்டி வி. இராசேந்திரன், கே. இராசேந்திரன் என்ற இருவரைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 16 (29—5—68) புதன்

# உண்மையை மழுப்புவதா?

தனது ஊழியர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு என ஒவ்வொரு மாநிலத்திலும் சில உயர்நிலைப் பள்ளிகளை—சொந்த நிர்வாகத்தில்—இந்திய அரசு கல்வித்துறை நடத்திக்கொண்டு வருகிறது. இப்பள்ளிக்கூடங்களில் இந்திப் பாடமும் சொல்லித் தரப்பட்டு வருகிறது.

இப்பள்ளிகள் பெரும்பாலானவற்றில் இதுவரை ஆங்கிலம் பாடமொழியாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது.

பாடமொழியாக இருந்துவருகின்ற ஆங்கிலத்துக்குப் பதிலாக, 'இனி இந்தி மொழி மட்டுந்தான் பாடமொழியாக இருத்தல் வேண்டும்' என இந்திய அரசின் கல்வித்துறை, ஒரு சுற்றறிக்கை மூலம் ஆணை பிறப்பித்திருக்கிறது.

ஆங்கில மொழியை நீக்கிவிட்டுப் பாடமொழியாக இந்தி திணிக்கப்படுகின்ற இந்திய அரசின் இவ்வேற்பாட்டிற்கு, தென் மாநிலங்களிலிருந்து எதிர்ப்புக் கிளம்பியது. பாடமொழி மாற்றம் பற்றிக் கல்வித்துறை என்றையத்தினம் சுற்றறிக்கை அனுப்பியதோ, அன்றே, இந்தியைத் திணிக்கின்ற அம்மாற்றத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியது.

பாடமொழியாக இருந்துவந்த ஆங்கிலத்தை ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு வகுப்பாக ஒழித்துவிட்டு, இறுதியில் முதல் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்பு வரையில் இந்தியைப் பாடமொழியாக்கிவிட வேண்டும் என்பதுதான் தனது இலட்சியம் என்பதை, திட்டவட்டமாக அந்தச் சுற்றறிக்கையின் வாயிலாக இந்திய அரசின் கல்வித்துறை அறிவித்திருக்கிறது.

பாட மொழியை, 'ஆங்கிலத்திலிருந்து இந்திக்கு மாற்றவேண்டும்' எனக் கல்வித் துறை, 1968 மார்ச் திங்கள் 29-ம் நாள் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அவ்வறிக்கை வெளிவந்ததும், இந்தித் திணிக்கப்படுவதற்கு எதிர்ப்பும் கிளம்பியது.

மத்திய உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்று மொழியாக இருந்து வந்த ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, பயிற்று மொழியாக இந்தியைத் திணிப்பது, தலைமை அமைச்சர் நேரு அவர்கள் தந்த வாக்குறுதிக்கு நேர் முரணானது எனக் காரணம் காட்டி, அப்பொழுதே பலர் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

மாநில அரசு மட்டத்தில் முதலில் கேரள அரசு, இந்தித் திணிப்பில் தனக்கிருக்கின்ற அதிருப்தியையும், கண்டனத்தையும் இந்திய அரசின் கல்வித் துறைக்குத் தெரிவித்தது. இதற்குத் தமிழக அரசும் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

மீண்டும் இப்பொழுது தமிழகக் கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள், இந்த இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசியுள்ளார். அதுவுமன்றி, தமது அமைச்சுத்துறை வாயிலாக இந்திய அரசின் கல்வி அமைச்சகத்துக்குத் தமது அதிருப்தியையும் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்.

ஏற்கனவே கடந்த சில நாட்களாகக் கிளம்பிய கண்டனங்களுக்கெல்லாம் வாய் மூடிக்கிடந்த மத்திய கல்வி அமைச்சகம், மத்திரி உயர்நிலைப் பள்ளிகளில் பாடமொழியாக இந்தியைத் திணித்திட தான் மேற்கொண்டுவிட்ட தகாத போக்குக்கு விளக்கம் அல்லது சமாதானம் கூற இப்பொழுது கிளம்பியிருக்கிறது.

இந்தித் திணிப்பை உள்ளடக்கமாகக் கொண்ட சுற்றறிக்கை அனுப்பிய நேரத்திலிருந்து நேற்றுவரை கிளம்பிய எதிர்ப்பையும் கண்டனத்தையும் அலட்சியம் செய்துவந்திருக்கின்ற மத்திய கல்வி அமைச்சகம், காலம் கழித்து விளக்கம் கூற முன்வந்திருப்பது ஒரு பக்கம் இருக்க, கூறப்பட்டுள்ள விளக்கத்தில் தெளிவில்லை; உண்மை நிலையை மூடி மறைப்பதாகவோ அல்லது மழுப்புவதாகவோ உள்ளது.

'ஆங்கிலம், இந்தி ஆகிய இரண்டு மொழிகளையும் கற்கவேண்டும்' என 1962-ம் ஆண்டில் மத்திய அமைச்சரவை செய்துள்ள முடிவுக்கேற்பவே மத்திய உயர்நிலைப் பள்ளிகளின் கல்விக் கொள்கை அமைந்திருக்கிறது.

அண்மையில் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை, 'மத்தியப் பள்ளிகளில் ஆங்கிலமும் இந்தியும் பாடமொழிகளாக இருக்கவேண்டும்' என்ற அமைச்சரவையின் முடிவை உறுதிசெய்வதேயாகும்.

மத்தியப் பள்ளிகள் துவக்கப்பட்ட நாள் முதற்கொண்டே, அப்பள்ளிகள், 'இரு மொழிக் கொள்கை' கொண்டதாகவே இருந்துவந்துள்ளது. ஆங்கிலத்தைப் பாடமொழியாகக் கொண்டுள்ள தென்னகப் பள்ளிக்கூடங்களில், உயர்தரமான இந்திமொழி கற்பிக்கப்பட்டு வந்துள்ளது.

**இந்தியையும் ஆங்கிலத்தையும் இணைப்புப் பாடமொழியாகப் புகுத்துவதற்காக, ஆரம்ப வகுப்புகளில் சமூகப் பாடங்களில் பயிற்சி அளிக்கும் பொருட்டு இந்தி மொழிக்கு மாற வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.**

**இந்த ஆணை, மாணவர்களுக்கோ ஆசிரியர்களுக்கோ எத்தகைய இடரையும் அளிக்காது.**

**படிப்படியாக ஆங்கிலத்தை ஒழித்துவிட்டு, இந்தியை மட்டுமே பாட மொழியாக ஆக்கவேண்டும் என்பதுதான் இலட்சியம்!**

இந்தத் தகவலை, செய்தியாளர்களிடம், குட்டி கல்வி அமைச்சராக இருந்துவரும் பகவத் ஜா ஆசாத் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

குட்டி அமைச்சரின் விளக்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த செய்தியாளர்கள், **'மத்தியப் பள்ளிகளின் நிறுவனம், மத்தியப் பள்ளிகளின் பாட மொழி பற்றி அனுப்பியுள்ள கொள்கைச் சுற்றறிக்கையைத் தங்களுக்குக் காட்டும்படி கோரியுள்ளனர். அவர்களின் கோரிக்கைக்கு இணங்க மறுத்துவிட்டார் குட்டி அமைச்சர்!**

கொள்கை பற்றிய சுற்றறிக்கையை, செய்தியாளருக்குக் காட்டக் குட்டி அமைச்சர் மறுத்தது ஏன்?

தாம் கூறிய விளக்கத்துக்கு ஒப்ப, பாட மொழிக் கொள்கை பற்றிய சுற்றறிக்கை இருந்திடும்பட்சத்தில், அதைச் செய்தியாளர்களிடம் காட்டக் குட்டி அமைச்சர் மறுத்திருப்பாரா? அவ்வறிக்கையைச் செய்தியாளர்களிடம் காட்ட மறுத்ததிலிருந்தே, மத்திய பள்ளிகளில் ஆங்கிலம் பாட மொழியாக இருந்துவந்ததை ஒழித்துவிட்டு, அதனிடத்தில் இந்தியைத் திணித்திட வேண்டும் என்பதையே சுற்றறிக்கை வாயிலாக மத்திய கல்வி அமைச்சகம் ஆணை பிறப்பித்திருக்கிறது என்பது உண்மையும் உறுதியும் ஆகிறது.

இது மட்டுமா? இன்னும் இருக்கிறது!

**இந்தித் திணிப்புப் பற்றிய முக்கியப் பகுதியை மட்டும் நீக்கிவிட்டு, எஞ்சிய பகுதியை மட்டுமேகொண்ட சுற்றறிக்கையின் நகல், செய்தியாளர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது!**

இதென்ன முகமூடி வேலை? ஒரு அரசுத் துறை செய்கின்ற பணியா இது? இதில் நேர்மை உள்ளதா? நாணயந்தான் இருக்கிறதா?

இதுமட்டுமா? இன்னும் வியப்பளிக்கும் செய்தி இருக்கிறது!

**'ஆங்கிலத்தை நீக்கிவிட்டுப் பாடமொழியாக இந்தியைத் திணிக்க வேண்டும்' என்ற கருத்தைக்கொண்ட—கல்வி அமைச்சுத்துறை அறிவித்திருக்கின்ற நான்கு பக்கங்கள் கொண்ட சுற்றறிக்கையின் பிரதிகளை, செய்தியாளர்களுக்கு விநியோகிக்கும்படி கல்வி அமைச்சர் திரிகுண சேன் கட்டளையிட்டிருந்தார்.**

**அக்கட்டளைக்கிணங்க, அச்சுற்றறிக்கையின் பிரதிகள் கொண்ட கட்டு ஒன்று, செய்தியாளர்கள் முன்பு வைக்கப்பட்டிருந்தது ஆனால், அந்தச் சுற்றறிக்கைப் பிரதிகளைச் செய்தியாளர்களுக்குக் கொடுக்கக்கூடாது என, குட்டி அமைச்சர் பகவத் ஜா ஆசாத் அவர்கள் தீர்மானித்துவிட்டார்.**

**சுற்றறிக்கை [illegible], குட்டி அமைச்சரின் கையடக்கத்தில், வந்த இடத்துக்கே திரும்பிவிட்டிருக்கிறது!**

**தலையை, வால் ஆட்டிவைக்கிறது! பெரும் பொறுப்பேற்றுள்ள கல்வி அமைச்சர் திரிகுண சென் அவர்களை, அவர் முடிவின்படி செயல்பட வேண்டிய குட்டி அமைச்சர் பகவத் ஜா ஆசாத் ஆட்டிப்ப [illegible]துக் கொண்டிருக்கின்றார்!**

மத்திய கல்வி அமைச்சகத்துக்குள்ளாகவே குழப்பம்—அதிகாரப் போட்டி!

மத்திய உயர்நிலைப் பள்ளிகளில் பாட மொழியாக உள்ள ஆங்கிலத்தை ஒழித்துவிட்டு இந்தியைப் பாட மொழியாகத் திணிக்க, மத்திய கல்வி அமைச்சுத் துறை சதி நடத்தியிருக்கிறது என்பதுதான் முழு உண்மை. இதை உறுதிப்படுத்த, விவகாரத்தைக் கிளப்பியுள்ள சுற்றறிக்கையைச் செய்தியாளர்கள் பார்வையில் படவிடாமல் மூடி மறைத்துவிட்டிருப்பதும், முக்கியமான பகுதியை நீக்கிவிட்டு, எஞ்சிய பகுதிகளைக் கொண்ட சுற்றறிக்கைப் பிரதிகளைச் செய்தியாளர்களுக்கு வழங்கியிருப்பதுமே போதுமானதாகும்.

—கா. க.

# காமராசரும் அண்ணாவும்

## ம.பொ.சி. ஒப்புவமை!

சென்னை, மே 26—

"இந்தியாவின் ஆட்சியைப் பற்றி அமெரிக்காவில் அண்ணாவிடம் கேட்டார்கள்; அவர் நினைத்திருந்தால்,

**'நிலைப்பது சந்தேகம்'**

என்று சொல்லியிருக்கலாம்; அப்படிச் சொல்லியிருந்தால், அங்குள்ள பத்திரிகைகள், எட்டுக் கலம் தலைப்பிட்டு வெளியிட்டிருக்கும்!

"ஆனால், அவர் அப்படிச் சொல்லவில்லை—

**"இந்திராவின் ஆட்சி நிலைக்கும்; பல சிரமங்களைச் சமாளித்து அவர் ஆட்சி நடத்துகிறார்"**

என்று சொல்லிவிட்டுத்தான் திரும்பி வந்திருக்கிறார்!

"காமராசர் அமெரிக்காவுக்குப் போனால்கூட, இப்போது இந்திரா மீதுள்ள கோபத்தில்,

**'சந்தேகம்'**

என்றுதான் சொல்லியிருப்பார்; இங்கே வந்த பிறகு கேட்டால்,

**'கவிழ்வது சந்தேகம்'**

என்று சொன்னதாகச் சொல்லுவார்.

'ஆனால் முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'இந்தியன்' என்ற சுயமரியாதையோடு — இந்திய ஒற்றுமைக்கு உறுதி அளித்துவிட்டு வந்தார்!"

(91-வது வட்டக் கூட்டத்தில்)

# கடும் எதிர்ப்புக்குப் பின் டில்லியின் 'ஞானோதயம்'?

## மத்திய பள்ளிகளில் ஆங்கிலமும் நீடிக்குமாம்

### கல்வித்துறை அமைச்சரின் காலங்கடந்த அறிவிப்பு

புதுடில்லி, மே 27—

"மத்திய பள்ளிகளில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட வகுப்புகளும், இந்தியைப் பயிற்சி மொழியாகக் கொண்ட வகுப்புகளும் தனித்தனியே இயங்குவதை நீக்கிவிட மத்திய அரசு முடிவு செய்திருப்பதாக வெளியான செய்தி தவறு"

என்று, மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் திரிகுண சென் தெரிவித்தார்.

"இப்படிப்பட்ட சுற்றறிக்கை எதுவும் கல்வியமைச்சுத் துறையினால் அனுப்பப்படவில்லை" என்றார் அவர்.

"மத்திய பள்ளிகளில் ஆங்கிலம், இந்தி இரண்டும் பயிற்சி மொழியாகத் தொடர்ந்து இருக்கும்; 1962-ல் அமைச்சரவை எடுத்த முடிவுப்படி அந்தப் பள்ளிகளில் பயிலும் ஒவ்வொரு மாணவனும் ஒன்றுமுதல் 11-ம் வகுப்பு வரை ஆங்கிலம், இந்தி ஆகிய மொழியில் பயில வசதியளிக்கப்படும்" என்று துணைக் கல்வியமைச்சர் திரு. பகவத் ஜா ஆசாத் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"மத்திய பள்ளிகளின் தலைமையகம் அண்மையில் அனுப்பிய சுற்றறிக்கையில்கூட, இந்தியும் ஆங்கிலமும் பயிற்சி மொழிகளாக இருக்கும் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது' என்று அவர் மேலும் விளக்கினார்.

"மத்திய பள்ளிகள் துவக்கப்பட்ட கால முதலே இரு மொழிப் பள்ளிகளாகத்தான் இருந்துவருகின்றன; தென்னகத்தில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்டுள்ள பள்ளிகளில் உயர்தர இந்தி கற்பிக்கப்பட்டு வருகிறது" என்றும் அவர் கூறினார்.

"அந்தப் பள்ளியின் ஆசிரியர்கட்கோ, மாணவர்கட்கோ எவ்விதச் சங்கடமும் ஏற்படுத்தக்கூடிய நிலையில் ஆணை பிறப்பிக்கப்படவில்லை" என்றார் அவர்.

# இருபோக சாகுபடி திட்டம்

## 2,000 ஏக்கர் நிலத்தில் செயல்படுத்தப்படும்

கடலூர், மே 28—

சிதம்பரம் தாலுகாவில் வீராணம் ஏரி பாசனப் பகுதியில் இருபோக சாகுபடி திட்டத்தை அமல் நடத்தத் தீவிர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீராணம் ஏரி தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய ஏரியாகும். இதனால் 45 ஆயிரம் ஏக்கர்கள் பாசன வசதி பெறுகின்றன.

16 ஆயிரம் ஏக்கர்களில் ஏற்கனவே இருபோக சாகுபடி நடந்து வருகிறது; மீதியுள்ள 29 ஆயிரம் ஏக்கர்களிலும் இருபோக சாகுபடித் திட்டத்தை அமல் செய்யத் தீவிர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இப்பொழுது வீராணம் ஏரியில் தண்ணீர் நிரம்பி இருக்கிறது; எனவே, ஜூன் 1-ம் நாள் முதல் தண்ணீரைப் பாசனத்துக்குத் திறந்துவிடுவது குறித்துப் பரிசீலனை நடந்து வருகிறது. இதனால் 2000 ஏக்கர்கள் கூடுதலாக இருபோக சாகுபடித் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

# நேருவின் எண்ணத்திற்கு நேர்மாறாக!

"இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்று நேரு நினைத்தாரோ, அதற்கு நேர்மாறான திசையில் இந்தியா இப்போது போய்க் கொண்டிருக்கிறது! நான்காந்தர நாடாக ஆகிக் கொண்டிருக்கிறது!

"உணவுக்காக-- உடைக்காக-- கல்விக்காக--- கௌரவத்திற்காக-எல்லாவற்றுக்காகவுமே இந்தியா இன்று பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறது!

"நல்ல நிலைமையில் இந்தியா இருக்க வே[illegible] வெளிநாட்[illegible] சொல்லிவிட்[illegible] இருக்க வே[illegible] இந்தியா நினைக்க[illegible]

"ஒருவன், மற்றொரு[illegible]வில் இருப்பதைவிட, தன் சொந்தக் காலில் நின்று சாவதே மேல்!"

— வி. கே. கிருஷ்ண மேனன்

# 'புதிய வரி போட முடியாது' எனக் கூறிய ஒரு மாநில முதலமைச்சரை இப்போதுதான் பார்க்கிறேன்'

## தமிழ் நாட்டுத் 'தேசிய'ங்களுக்கு ம.பொ.சி. சாட்டை

"முதலமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி, 'புதிதாக வரி போடுங்கள்' என்று மொரார்ஜி தேசாய் கூறினர்; ஆனால் தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'புதிய வரி எதுவும் என் மக்கள்மீது விதிக்கமுடியாது.

"சுதந்தரம் பெற்ற இருபதாண்டுக் காலத்தில், 'என் மாநில மக்கள்மீது வரி போட முடியாது' என்று கூறிய முதலமைச்சரை இப்போதுதான் பார்க்கிறேன்"

என்று தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், சென்னை 91-வது வட்டத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவர் மேலும் குறிப்பிட்ட சில பகுதிகள் வருமாறு:—

### இந்தக் கேடுகெட்ட நிலை வேறு எங்குமில்லை!

மத்தியில் உள்ள அதிகாரங்கள் மாநிலங்களுக்குப் பரவலாக்கப் பட வேண்டும் என்று கோருகிறது தமிழரசுக் கழகம், கடைசி உரிமைகூட டெல்லியில் இருக்கிறது. இப்படி ஒரு கேடுகெட்ட சமஷ்டி, உலகத்தில் வேறு எங்கும் இல்லை. ஒரு கோடி மக்களைக் கொண்ட மலேசியாவில் பதினேரு மாநிலங்கள் இருக்கின்றன; அங்கும் இப்படி இல்லை.

### அன்று ஓட்டுப் போட்ட மக்கள் இன்று எங்கே?

1952-ல் ஓட்டுப் போட்ட மக்கள் —1957-ல், 1962-ல் ஓட்டுப் போட்ட மக்கள் ஏன் 1967-ல் போடவில்லை என்பதைக் காங்கிரசு நண்பர்கள் சிந்திக்கவேண்டும்.

அவர்கள் கட்சி நடத்திய இலட்சணம்—ஆட்சி நடந்த முறை ஆகியனவே அதற்குக் காரணம்!

தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் கொண்டுவந்தார்கள்—பொற்கொல்லர்கள் தற்கொலை செய்துகொண்டதுதான் மிச்சம்!

மிச்சமில்லாத நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்தார்கள்; 'பணக்காரர்களோடு கூட்டுச் சேர்ந்து அவர்கள் செய்த சதி' என்பதை, உழவர்கள் புரிந்து கொண்டார்கள்!

அவர்கள் செய்த எந்த ஒரு சட்டமும், எந்த ஒரு திட்டமும் ஏழைகளுக்குப் பலன் அளிக்கவில்லை!

இதை நான் சொல்லவில்லை; நேற்றுவரை அமைச்சராக இருந்த நந்தாவே சொல்கிருர்.

### கேட்பதில் குறைச்சலில்லை — டில்லியிடம் சொல்வதுதானே

'படி அரிசி போடு' என்று கேட்கும் அதே நேரத்தில், உதவிப் பணம் கொடுக்கும்படி டெல்லியிடமும் சொல்வதுதானே!

### 'கொடுக்காதே' எனபதா?

அவர்கள் ஆட்சியின்போது டெல்லியிடம் வாங்கிய கடனையொட்டிய வட்டிக்கு, 'வாய்தா கொடு' என்று நாம் கேட்டால், அவர்கள், 'கொடுக்காதே' என்று பேசுகிருர்கள்!

### குறைந்த வட்டிக்கு வாங்கி...

இரண்டரை சதவிகித வட்டிச்கு உலக பாங்கியில் கடன் வாங்கி, 5 சதவிகித வட்டிக்கு மத்திய அரசு நமக்குக் கடனாகக் கொடுக்கிறது.

நமக்கு வரிபோடாத அந்நியன், இரண்டரைச் சதவிகிதத்திற்குக் கொடுக்கும்போது, அன்ருடம் வரி வாங்குகிற மத்திய அரசு 5 சதவிகிதம் வட்டி வாங்குகிறது!

### நாடு முழுமையிலும் படி அரிசி போட இயலுமே!

இங்கே ஒரு கல்வித் துறை—மத்தியில் ஒரு கல்வித் துறை; இங்கே ஒரு சுகாதாரத் துறை—மத்தியில் ஒரு சுகாதாரத் துறை; இந்த இரட்டை ஆட்சியை மாற்றினல் பல கோடி ரூபாய் மிஞ்சுமே! அதைக் கொண்டு நாடு முழுவதிலும் படி அரிசி போட முடியுமே!

# தமிழகத்தில் புதிய கனி வளக் கண்டுபிடிப்பு

## மூன்று மாவட்டங்களில் விமானம்மூலம் ஆய்வு

திருச்சி, மே 28—

"ஐ. நா. மன்றத்தின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேலூர், சேலம், விருத்தாசலம் ஆகிய இடங்களுக்கிடையே யுள்ள பகுதியில் விமானம்மூலம் நடத்தப்படும் நில வள ஆய்வு இன்னும் ஒரு வார காலத்தில் முடிவடைந்துவிடும்; ஆய்வு அறிக்கை மூன்று மாத காலத்தில் உருவாக்கப்பட்டுவிடும்"

என்று தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

கல்லக்குடியில் நடைபெற்ற தமிழகச் சுரங்கத் தொழிலாளர் பாதுகாப்பு வார விழாவில் கலந்து கொண்டு அமைச்சர் உரையாற்றுகையில்,

"சில இடங்களில் அணுசக்திக்குப் பயன்படக்கூடிய தோரியம் கிடைப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது"

என்று குறிப்பிட்டுவிட்டு மேலும் கூறியதாவது:—

"தமிழகத்தில் தொழில் வளம் பெருக, நில வள ஆய்வைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்.

"ஐ. நா. திட்டத்தின் நிதியிலிருந்து கிடைத்த உதவியை [illegible] த்திக்கொண் [illegible] டு, தென் [illegible] ட்டங்களில் [illegible] 0 சதுர கிலோ [illegible] பல ஆய்வு நடத்தப்பட்டது.

"இத்திட்டத்துக்கு சுமார் ரூ 75 இலட்சம் அளிக்க ஐ. நா. ஒப்புக்கொண்டிருக்கிறது. இதற்குத் தமிழக அரசு ரூ 35 இலட்சம் செலவிடும்."

# மாமல்லபுரத்திற்குச் செல்லும் தனிப் பேருந்துகள்

## வேடந்தாங்கலுக்கு செல்லாது

சென்னை, மே 28—

ஞாயிற்றுக்கிழமைகளில் மாமல்லபுரத்திற்குத் தமிழக அரசுப் போக்குவரத்துத் துறையினரால் விடப்பட்டுவரும் தனிப் பேருந்து, ஜுன் முதல் அக்டோபர் வரை வேடந்தாங்கலுக்குச் செல்லாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வேடந்தாங்கலில் உள்ள பறவைகளின் புகலிடத்தில் இந்தக் காலங்களில் எத்தகைய பறவைகளும் தங்காத காரணத்தினல் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் விடப்பட்ட பேருந்துகள் இதுவரை வேடந்தாங்கலுக்குச் சென்று கொண்டிருந்தது.

# காஞ்சிக்கு அருகில் காச நோய் மருத்துவ விடுதி

## கட்டிட வேலைகள் விரைவில் துவங்கும்

சென்னை, மே 28—

காஞ்சிபுரத்தை அடுத்த ஐயங்கார்குளத்தில் 350 படுக்கைகள் கொண்ட காசநோய் மருத்துவமனை ஒன்றைத் துவக்குவதற்கான அனுமதியைத் தமிழக அரசு அளித்திருப்பதாகத் தெரிகிறது.

மருத்துவமனை அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டதாகவும், கட்டிட வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் இலட்சுமிகாந்தன் பாரதி தெரிவித்துள்ளார்.

நூறு ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட தொழிற்பேட்டை ஒன்று அண்மையில் இயங்க ஆரம்பிக்கும் என்றும் தெரியவருகிறது.

"செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை காஞ்சீபுரத்திற்கு மாற்றுவதற்கான பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன" என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த அலுவலகம் ஜூலை 1-ம் நாள் முதல் காஞ்சீபுரத்தில் இயங்கும். அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்குக் குறைந்த வருவாய்க்காரர்கட்கான வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 240 வீடுகளைக் கட்டி முடிக்கும் பணியினை மாநில வீட்டு வசதி பாரியம் மேற்கொண்டிருக்கிறது.

தற்போது இரண்டு மூன்று தற்காலிகக் கட்டடங்களில் இவ்வலுவலகம் இயங்கும்.

ஜூலை 1-ம் நாள் காஞ்சீபுரத்திற்கு மாற்றப்படும் புதிய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தைத் தமிழக முலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் துவக்கிவைப்பார்கள் என்று தெரிகிறது.

புதிய அலுவலகக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவினையும் முதலமைச்சர் அண்ணா நடத்திவைப்பார் என்றும் அறியப்படுகிறது.

# பள்ளப்பட்டியில் முஸ்லிம் லீக் துவக்கவிழா

கரூர் வட்டம் பள்ளப்பட்டியில் முஸ்லீம் லீக் கிளைத் துவக்கவிழா 19—5—68-ல் திரு. பி. எம். அப்துல் அஜீஸ் தலைமையில் நடைபெற்றது.

கிளையினைத் துவக்கிவைத்து திரு. மணிமொழி மௌலானா கலீலுர் ரகிமான் உரையாற்றினர்; முஸ்லீம் லீகின் வரலாற்றை விரிவாக எடுத்துரைத்தார்.

திரு. யூ. கே. அப்துல் ரகீம், பிறைக் கொடியினை ஏற்றுவித்தார்.

தி. மு. க. சார்பில் பரமத்தி சண்முகம் கலந்துகொண்டு பேசுகையில், முஸ்லீம் லீகும்—திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து நின்று இந்த நாட்டுக்குச் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும், கடந்த காலத்தில் இணைந்து செயல்பட்டு ஈட்டிய வெற்றிகள் குறித்தும் விளக்கினர்.

இறுதியில் இசைமுரசு நாகூர் அனிபா [illegible] வினரின் இன்னிசை நிகழ்ச்சி [illegible] டபெற்றது.


கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,
மூங்கில்துரைப்பட்டு, கள்ளக்குறிச்சி தாலுக்கா,
தெ. ஆ. மாவட்டம்

ஷிப்டு எஞ்சினியர் பதவிக்காகத் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பத்தில் தங்களுடைய வயது, தகுதி, முன் அனுபவம், தற்சமயம் வாங்கும் ஊதியம், எதிர்பார்க்கப்படும் ஊதியம் முதலியவைகளைக் குறிப்பிட்டு 15—6—68-ம் தேதிக்குள் விண்ணப்பம் வந்து சேருமாறு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தகுதி

(1) ஷிப்டு எஞ்சினியர்கள் : மெக்கானிக்கல் எஞ்சினியரிங்கில் பட்டமோ (அல்லது) டிப்ளமோவோ பெற்றிருக்க வேண்டும். சர்க்கரை ஆலைகளில் குறைந்தது 5 ஆண்டு முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

எஸ். டி. வைத்திலிங்கம், எம்.ஏ., எம்.லிட்.,
பொது நிர்வாகி


இசைக்குயில்

# யூ. ஆர். சீவரத்தினம் இசைக் குழு

## 'அண்ணா அயல்நாட்டு பயணம்' பற்றிய பாடல்கள் இணைப்பு

இசைக்குயில் யூ. ஆர். சீவரத்தினம், தி. மு. கழகச் சார்பில் தென்னகமெங்கும் நடத்திவரும் 'அண்ணாவின் ஆட்சி' என்ற இசை நிகழ்ச்சி, ஏற்கனவே மாபெரும் வரவேற்பையும், பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.

இப்போது இந்நிகழ்ச்சியுடன், 'அறிஞர் அண்ணாவின் அயல்நாடுச் சுற்றுலா' பற்றிய வெற்றி முழக்கப் பாடல் ஒன்றை, (வில்லிப்புத்தன் இயற்றியது) பல்வேறு மெல்லிசைப் பண்களில் பின்னி அமைத்து இணைத்துள்ளனர்.

இந்தப் பாடல், புஞ்சைப்புளியம்பட்டியில் 31—5—68-ல் நடைபெறவிருக்கும் இக்குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியில்— அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் தலைமையில் முதன்முதலாக அரங்கேறுகிறது.

# ஹையர் கிரேடு ஆசிரியர்கட்கு வேலை உயர்வு!

திருச்சி, மே 28—

இந்த ஆண்டில் தமிழகத்தில், 3,000 ஹையர் கிரேடு ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு வேலைகளாக மாற்றப்படும் என்று தெரிகிறது.

மாநிலத்தில் இப்போது ஆரம்பக் கல்வி இலவசமாயிருப்பதால், கல்வியின் தரத்தை மேம்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிகிறது.

ஹையர் கிரேடு ஆசிரியர் பயிற்சியைப் படிப்படியாக ரத்து செய்வதே அரசின் கொள்கையாயிருக்கும் என்று கூறப்படுகிறது.

## முகவரி மாற்றம்

'விடிவானம்' பத்திரிகையின் அலுவலகம் கீழ்க்காணும் முகவரிக்கு மாற்றப்பட்டிருப்பதாக ஆசிரியர் ஏ. நெடுமாறன் அறிவிக்கிருர்.

'விடிவானம்'
1, ஏலாக் கந்தப்பன் தெரு,
எடப்பாளையம்,
சென்னை-3.

# உழவர் முன்னேற்றச் சங்கம்

## மாயூரம் தொகுதியில் அமைப்பு

மாயூரம் தொகுதி மணல்மேடு வட்டார உழவர் முன்னேற்றச் சங்க அமைப்புக் கூட்டம், 16—5—68-ல் மணல்மேடு தி.மு.க. செயலாளர் செ. இரவி தலைமையிலும்—தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். கிட்டப்பா முன்னிலையிலும் நடைபெற்றது.

அதுபோது சங்கத்திற்குத் தலைவராக என். கிட்டப்பா எம்.எல்.ஏ., துணைத் தலைவராக பி. சாமிநாதன், செயலாளராக இரா. சிவப்பிரகாசம், துணைச் செயலாளராக இராமையன், பொருளாளராக நடேசன், அமைப்பாளர்களாக பன்னீர்செல்வம், எம். தங்கவேல், ஜி. கே. மூர்த்தி ஆகியோரும், ஆலோசகராக ஊராட்சி ஒன்றியத் தலைவர் ப. கோவிந்தசாமியும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஜூலைத் திங்கள் முதல் வாரத்தில் மணல்மேட்டில் உழவர் மாநாட்டினை நடத்துவதென்றும், மாநாட்டில் கலந்துகொள்ளத் தமிழக அமைச்சர்கள்-சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள்-மேலவை உறுப்பினர்கள்—கலைஞர்கள் ஆகியோரை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

# வருந்துகிறோம்

முசிரி வட்டம் ஒக்கரை ஊராட்சித் தலைவரும் உப்புலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் துணைத் தலைவரும் கிளைக் கழகச் செயலாளருமான இரா. க. செல்லமுத்து 19—5—68-ல் இயற்கையெய்தினர். செய்தி கேட்டுச் சுற்று வட்டார கழக நண்பர்கள், ஊர்ப் பொதுமக்கள் அவரது இல்லம் சென்று தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

20—5—68-ல் நடைபெற்ற சம ஊர்வலத்தில் ஏராளமான கழகத் தோழர்களும் பொதுமக்களும் கருப்புச் சின்னமணிந்து கலந்து கொண்டனர்.

சவ அடக்கத்திற்குப் பின், இடுகாட்டில், உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் வேணுராசன் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றடி; மறைந்த தோழர், கழகத்திற்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஆற்றிவந்த பணிகள் பற்றி முசிரி வட்டச் செயலாளர் ஆ. துரைராசு எம்.பி., அவைத் தலைவர் அரு ஆதிமூலம், எம். எஸ். வெங்கடாசலம் எம். ஏ. பி. எல்., இளம்பரிதி, சோமு, மா. நடராசன், சித்தி, கலியபெருமாள், நடராசன், நல்லமுத்து, மருதமுத்து, பாலகிருஷ்ணம்பட்டி ஊராட்சித் தலைவர் ஆர். பெரியசாமி ஆகியோர் பேசிய பின், அவரது குடும்பத்தினருக்கும் அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

## பேச்சாளர் முகவரி :

மணிமாறன்
தி. மு. கழகப் பேச்சாளர்,
போத்தனூர் (அஞ்சல்),
சேலம் மாவட்டம்.

## புதிய முகவரி

புலவர் அறிவுடைநம்பி,
எண் 4, பாலசுப்பிரமணிய
பேருந்துகூடக் குடியிருப்பு,
குருவப்ப நாயுடுத் தெரு,
கடலூர்-1.

# வாரியாங்காவலில் கல்வி அமைச்சர்

## பல்வேறு அமைப்புகளின் சார்பில் வரவேற்பு

வாரியங்காவல், மே 27—

கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மே-25-ம் நாள் மாலை 5-மணியளவில் வாரியங்காவல் கிராமத்திற்கு வருகை தந்து இவ்வூரில் புதிதாகக் கட்டப்பட்ட இலையூர்—வாரியங்காவல் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

திரளாக மக்கள் குழுமியிருந்து அமைச்சருக்கு வரவேற்பு அளித்தனர்.

கட்டிடக் குழுவின் சார்பிலும், வாரியங்காவல், இலையூர் ஊராட்சி மன்றங்களின் சார்பிலும், வாரியங்காவல், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் சார்பிலும் வரவேற்பு இதழ்கள் வாசித்து அளிக்கப்பட்டன.

பின்னர் அமைச்சர் அவர்கள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் வருகை தந்தார்கள். நெசவாளப் பெருமக்கள், சிறப்புமிக்க வரவேற்பு அளித்தார்கள்.

வரவேற்புக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் பேசுகையில் நெசவாளர்களுக்காக அரசு செய்துவரும் உதவிகளையும், விற்பனைக் கழிவை தொடர்ந்து கொடுக்கவேண்டுமென மத்திய அரசுடன் வாதாடி வருவதையும், தமிழக அரசு தன்னால் முடிந்த அளவு நெசவாளர்களுக்கு உதவி செய்துகொண்டு வருமென்பதையும் தெரிவித்தார்கள்.

# கழகத் தேர்தல்கள்

## சென்னை வட்ட (டிவிஷன்) தேர்தல்கள்

### 1968 சூன் 1, 2 (சனி --- ஞாயிறு)

1. சென்னை மாவட்டத்தில் புதிதாக விரிவாக்கப்பட்ட 120 வட்டங்கள் (டிவிஷன்கள்) அடிப்படையில் ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு கிளை அமைப்புக்கான தேர்தல்கள் 1968 சூன் 1, 2 ஆகிய நாட்களில் நடைபெற வேண்டும்.

2. சென்னையின் வட்ட (டிவிஷன்) கிளைகள் கழகச் சட்ட திட்டத்தில் நகரக் கழகங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தகுதியின் அடிப்படையில்—அதாவது, நகரக் கழகத்துக்குச் சமமாகக் கருதப்படும்.

3. வட்டக் கிளைகளின் தேர்தல்களில் எந்தப் பொறுப்புக்கும் (அலுவலாளர், மேலமைப்புப் பிரதிநிதிகள், செயற்குழு உறுப்பினர்கள் ஆகிய எந்தப் பொறுப்புக்கும்) போட்டியிடுபவர்கள் குறைந்தது ஐந்தாண்டுக் காலமாவது கழக உறுப்பினர்களாகத் தொடர்ந்து இருக்கவேண்டும்.

4. விரிவாக்கப்பட்ட வட்டங்கள் (டிவிஷன்கள்) அடிப்படையில் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தலைமைக் கழகத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொண்டபோது கொடுத்த முகவரி, எந்த வட்டத்தில் சேர்க்கப்படுகிறதோ அந்த வட்டத்தில் அமையும் கிளையின் தேர்தல்களில் மட்டுமே கலந்து கொள்ள உரிமை பெற்றவர்களாவர்.

5. ஏற்கனவே, முறைப்படி 25—5—68-ம் நாளுக்குள் தமது முகவரியை மாற்றிக்கொண்டு தலைமைக் கழகத்திலிருந்து அனுமதி பெற்றுள்ள உறுப்பினர்கள் மட்டும், தாம் அனுமதி பெற்றுக்கொண்ட முகவரியில் அமையும் வட்டக் கிளை தேர்தல்களில் பங்குகொள்ளலாம்.

6. கிளையின் எந்தப் பொறுப்புக்கும் (செயற்குழு உறுப்பினர் பொறுப்பு உள்பட) போட்டியிடுவதானாலும், தமது வேட்பாளர் விண்ணப்பத் தாளுடன் ரூ. 2 விண்ணப்பக் கட்டணமாக ஆணையாளரிடம் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.

7. சென்னை வட்டக் கிளைகளின் தேர்தல்களை நடத்திவைக்கும் ஆணையாளர்கள் பகுதிச் செயலாளர்களால் மாவட்டக் கழகச் செயலாளரின் ஆலோசனைப்படி அனுப்பிவைக்கப் படுவார்கள்.

8. ஆணையாளர்களாகப் பொறுப்பு ஏற்பவர்கள் எக்காரணம் கொண்டும் கிளையின் தேர்தல்களை நிறுத்தவோ, தள்ளி வைக்கவோ கூடாது. தேர்தல்கள் பற்றி எழுப்பப்படும் ஆட்சேபனை மற்றும் பிரச்சினைகளைத் தெளிவாகப் பதிவு செய்துகொண்டு, தேர்தல்களை முறைப்படித் தொடர்ந்து நடத்தி முடிக்க வேண்டும்.

9. தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்ளவும், வாக்களிக்கவும், போட்டியிடவும் விரும்புபவர் நடைமுறைக் காலத்திற்கான உறுப்பினர் உரிமைச் சீட்டைப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

10. ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த நடவடிக்கை இறுதியாகத் தலைமைக் கழகத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டும் அறிவிக்கப்பட்டும் உள்ளவராகவோ, அல்லது தலைமைக் கழகத்தால் பெயர் குறிப்பிடப்பட்டுத் தெரிவிக்கப்பட்டவராகவோ இருந்தாலன்றி மற்ற காரணங்களுக்காக முறைப்படி தகுதிபெற்றுள்ள உறுப்பினர் எவரையும் போட்டியிடும் உரிமையிலிருந்து தடுத்தல் கூடாது.

11. ஒரு அமைப்புக்குரிய தேர்தல், அந்தந்த அமைப்புக்குட்பட்ட இடத்திலேயே -- அந்தந்த அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்டு நடத்தப்படல் வேண்டும்.

12. தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள், தங்கள் தங்கள் உறுப்பினர் உரிமைச் சீட்டை உடன் கொண்டுவர வேண்டும். உடன் கொண்டுவராத முறையான உறுப்பினரைப் பொறுத்துத் தேர்தல் ஆணையாளர், தம்மிடம் கிளையின் செயலாளர் அல்லது அமைப்பாளரால் ஒப்படைக்கப்பட்ட கிளைக் கழக உறுப்பினர் பதிவு விவரச் சீட்டில் ஆய்ந்து பார்த்து, தகுதியான -- முறையான உறுப்பினர் எனத் தெளிந்தும், அங்கு கூடியுள்ள இரு உறுப்பினர்களிடம் உறுதிமொழி பெறறும, காாடு கொணடுவராத உறுபபினரைத தேர்தல கூட்டத்தில் பங்குகொள்ள அனுமதிக்கலாம்.

13. கிளையின் தேர்தல்களில், முறையே அவைத் தலைவர் ஒருவர்—செயலாளர் ஒருவர்—துணைச் செயலாளர் ஒருவர்—பொருளாளர் ஒருவர்—மேலமைப்புப் பிரதிநிதிகள் 5 பேர்—என்ற வரிசைப்படி தேர்ந்தெடுக்கும் தேர்தல்கள் முடிந்த பிறகு, செயற்குழு உறுப்பினர்கள் 17 பேர் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும்.

14. பகுதிக் கழகப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அந்தத் தகுதியினாலேயே செயற்குழு உறுப்பினர்களாக ஆகமாட்டார்கள். அவர்கள் செயற்குழுவிலும் இடம் பெற விரும்பினால், செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

15. எந்த ஒரு பதவிக்கான தேர்தலானாலும், அதில் போட்டியிட விரும்புகிறவர் அதற்குரிய விண்ணப்பத் தாளை நிறைவு செய்து, முன்மொழிபவர் -- வழிமொழிபவர் கையொப்பங்களுடன், போட்டியிடுபவரோ முன்மொழிபவரோ வழிமொழிபவரோ தேர்தல் ஆணையாளரிடம், முறைப்படி உரிய கட்டணத்துடன் சேர்ப்பிக்க வேண்டும்.

16. அந்தந்தப் பொறுப்புக்களுக்குப் போட்டியிட்ட தோழர்கள் அனைவராலும் செலுததப்பட்ட தொகை முழுவதையும், முறைப்படி தலைமைக் கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கும் பொறுப்பைத் தேர்தல் ஆணையாளரும், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளரும ஏற்கவேண்டும்.

17. தேர்தல் பற்றிய மற்ற விவரங்களை, ஒவ்வொரு கிளைக்கும் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்டுள்ள 'தேர்தல் விதிமுறைகள்' என்ற வெளியீட்டில் காணலாம்.

'அறிவகம்', சென்னை-13 28—5—68

--- தலைமைக் கழகம் (தி.மு.க.)

---

பலன் தருகிறது படி அரிசித் திட்டம்

## எட்டிப் பிடிக்கமுடியாத விலைகளெல்லாம் இறங்கவில்லையா?

| பொருள் | | காங்கிரசு ஆட்சியில் ரூ. | இப்போது ரூ. |
|---|---|---|---|
| மிளகாய் | (100 கிலோ) | 900 | 140 |
| தனியா | ,, | 400 | 120 |
| கடலைப் பருப்பு | ,, | 292 | 102 |
| துவரம் பருப்பு | ,, | 230 | 135 |
| உளுத்தம் பருப்பு | ,, | 185 | 125 |
| கடுகு | ,, | 220 | 150 |
| புளி | ,, | 400 | 140 |
| கடலை எண்ணெய் | (கிலோ) | 4.50 | 2.55 |
| நல்லெண்ணெய் | ,, | 4.70 | 3.20 |

"இப்படி விலை இறங்கியிருப்பதைக் கண்டுதான் எரிச்சலால் காங்கிரசுக்காரர்கள், ஏதேதோ பேசுகிறார்கள் !

"படி அரிசியைப் போட்டதன் விளைவாக -- உணவுப் பொருட்களில் முக்கியமான அரிசி விலையைக் குறைத்ததன் பயனாக -- அண்ணாவின் புகழ்மிக்க படி அரிசித் திட்டத்தின் பயன்தான், இந்த விலைகளின் இறக்கம் !

"இந்த விலைகளின் இறக்கத்தால் பயன்பெறும் மக்களைக் கேட்கிறேன்—'தி. மு. கழக அரசு தொடர்ந்து ஆட்சி நடத்த வேண்டுமா? வேண்டாமா?' என்று !

(தொடர்ந்து ஆட்சி செய்யுங்கள்' என்று மக்கள் குரல்)

"மக்களின் குரல் இது ! மகேசனின் குரல் இது ! மக்களால் வீழ்த்தப்பட்டவர்களே -- உணர்ந்து கொள்ளுங்கள் !"

---

# படித்தவர் பலருக்கு வேலையில்லை!

### வழிகாட்ட வேண்டியவர் காரணம்வேறு கூறுகிறார்!

புதுடில்லி, மே 29—

"நாட்டில் இன்று வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி விட்டது; படித்தவர்கள் பலர் வேலையின்றித் திண்டாடுகின்றனர் !

"கடந்த சில ஆண்டுகளாகவே தேசிய வருமானம் குறைந்துகொண்டே வந்திருக்கிறது !

"எந்த அளவுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தோமோ, அந்த எல்லையை நிறைவு செய்யவும் இல்லை ! இதுதான் வேலையில்லாத் திண்டாட்டத்துக்குக் காரணமாகும் !"

—ஜெய்சுக்லால் ஹாத்தி

(மத்திய அரசு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)

---

# கொள்முதல் குறியளவை எட்டுகிறது!

### போதிய சேமிப்பு வைக்கவும் ஏற்பாடு

தமிழகத்தில் சம்பா கொள்முதல், பெரும்பாலும் முடிவடையும் நிலைமையில் இருக்கிறது.

இப்போது அரசிடம் உள்ள சேமிப்பை வைத்துக்கொண்டு ஆகஸ்டு இறுதிவரையில் சமாளிக்க இயலும் எனத் தெரியவருகிறது.

குறுவை அறுவடைக்குமுன் நெருக்கடியான மாதங்களில் சமாளிக்கும் பொருட்டு அதிக அளவில் சேமிப்பு வைக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

மே திங்கள் இறுதிக்குள் தமிழ் நாட்டில் ஐந்து இலட்சம் டன் சம்பா அரிசி கொள்முதல் செய்வதென இலக்கு நிர்ணயிக்கப்பட்டது; இதில் 90-சதவிகிதத்துக்குக் கொஞ்சம் அதிகமாகவே கொள்முதலாகிவிட்டது எனச் சொல்லப்படுகிறது.

---

# கிணறுகள் வெட்ட ரூ. 97 இலட்சம் கடனுதவி

### நில அடமான பாங்கிகள்மூலம் வழங்கத் திட்டம்

வேலூர், மே 28—

வடாற்காடு மாவட்டத்தில் புதுக் கிணறுகள் வெட்டவ[illegible]ண்ணெய் எஞ்சின்கள் அல்ல[illegible]ன்சாரப் பம்பு செட்டுகள் வை[illegible]வும், நில அடமான பாங்கிகள் மூலம் ரூ. 97 இலட்சத்துக்குக் கடனுதவிகள் அளிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

ஊராட்சி ஒன்றிப்பு ஆணையர்களின் சிபாரிசுகள்மீது இந்தக் கடனுதவிகள் அளிக்கப்படும்.

வடாற்காடு மாவட்டத்தில் மொத்தம் 16 ஊராட்சி ஒன்றிப்புகள் உள்ளன.

---

# தங்கள் பிரதிநிதிக்கு தொகுதி மக்கள் கார் பரிசளிப்பது தவறு?

### காங்கிரசு ஆட்சியில் கார் 'கோட்டா' பெற்றோர் பட்டியல் வேண்டுமா?

"தமிழ்நாட்டு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், 'தி.மு கழக எம்.எல்.ஏ.-க்கள் கார்கள் வாங்கியிருக்கிறார்கள்' என்று குற்றஞ்சாட்டுகிறார்.

அவரை ஒன்று கேட்கிறேன்; எம் எல்.ஏ.-க்களுக்குக் கார் தர வேண்டும் என்பதற்காக, "அவர்களுக்கென்று 'கோட்டா' ஒதுக்கீடு அளிக்கவேண்டும்" என்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டது எந்த அரசு? பழைய காங்கிரசு அரசுதானே!

வரட்டும் சுப்பிரமணியம்—பொது மேடைக்கு; 'பைல்'களைப் பார்த்துச் சொல்லட்டும்; 'எம்.எல்.ஏ.-க்களுக்குக் கார் கோட்டா தந்தது எந்த அரசு' என்று பார்த்துச் சொல்லட்டும் !

அவரது கவனத்திற்கு இன்னொன்றையும் கொண்டுவருகிறேன்; 1966-ம் ஆண்டு அவரது காங்கிரசுக் கட்சி ஆண்டபோது, 41 சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கார் ஒதுக்கியது; அவற்றில் 26 கார்களைக் காங்கிரசுக்காரர்கள் வாங்கிக் கொண்டார்கள்; ஏழெட்டுக் கார்கள் தி. மு. கழகத்தினருக்குக் கிடைத்தன; மீதியுள்ளவைகளை மற்றக் கட்சியினரும், சுயேச்சைகளும் வாங்கிக்கொண்டனர்.

அவ்விதம் கார் வாங்கிய காங்கிரசு எம்.எல்.ஏ.-க்களின் பட்டியல் இதோ :—

1. கரிச்சா கவுடர்
2 ஹாஜா ஷெரீப்
3. சீனிவாச படையாச்சி
4. மா[illegible]ப கவுண்டர்
5. சவுந்தரபாண்டியன்
6. கோவிந்தராசுலு நாயுடு
7. இராசாராம்
8. கிருஷ்ணசாமி
9. ஏ. ஆர். இரா[illegible]சாமி
10. கே. என். பழனிசாமி
11. ஏ. பி. பாலசன்
12. கோபால கவுண்டர்
13. இரத்தினவேலு கவுண்டர்
14. இராசகோபாலசாமி
15. இராமசாமி உடையார்
16. டாக்டர் நடராசன்
17. குழந்தை அம்மாள்
18. கே. டி. கோசல்ராம்
19. சுந்தரராசன்
20. சீனிவாசன்
21. ஏ. பி. சி. வீரபாகு
22. டி. எம். காளியண்ணன்
23. பொன்னுசாமி வில்வராயர் எம்.எல்.சி.
24. சாம்பசிவ ரெட்டியார் எம்.எல்.சி.
25. எஸ். வி. இலட்சுமணன் எம்.எல்.சி.
26. தியாகி அருணாசலம் எம்.எல்.சி.

**இதற்கு என்ன பதில் கூறுகிறார் சுப்பிரமணியம் ?**

**தி. மு. கழக ஆட்சியில், காங்கிரசுக்காரர்களும் கார் வாங்கியிருக்கிறார்கள்—தி. மு. கழகத்தினரும் கார் பெற்றிருக்கிறார்கள்.**

**இதிலுள்ள வேறுபாடு, தி. மு. க. எம்.எல்.ஏ.-க்களுக்கு தொகுதி மக்கள், 'தொகுதிப் பணிக்காக' என்று மக்களிடம் பணம் வசூலித்து கார் வாங்கித் தருகிறார்கள்! இந்தக் காரைப் பரிசளிக்க அந்த மக்கள், அமைச்சர்களை அழைக்கிறார்கள் -- கார் பரிசளிக்கப்படுகிறது.**

**தொகுதிப் பணிக்காக மக்களிடம் வசூலித்து சட்டமன்ற உறுப்பினருக்குக் கார் பரிசளிப்பது தவறா ?**

**காங்கிரசு ஆட்சியில் ஓராண்டில், 26 கார்களைக் காங்கிரசுக்காரர்கள் வாங்கினார்களே—அது பற்றிக் கழக முன்னணியினரோ, கழகப் பேச்சாளர்களோ பேசியது உண்டா? இதை ஒரு பெரிய பிரச்சினையாக எடுத்[illegible]கொண்டு பண்பு கெட்[illegible] கள் பேசியு[illegible] முடியுமா [illegible]**

--மு. [illegible]

(சென்[illegible])

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.